# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண் 243447590

**ஆணை நாள் 13.11.2020**

**முன்னிலை**

**திரு ரா. ராஜகோபால், இ.ஆ.ப., (ஓ)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA-3414/SCIC/2020**

| | | |
|---|---|---|
| திரு வே.ஜான்றோஸ் | -- | மேல்முறையீட்டாளர் |
| | /எதிர் | |
| பொதுத் தகவல் அலுவலர் /<br>கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,<br>தலைமையிடம்,<br>கன்னியாகுமரி மாவட்டம்,<br>(இ) நாகர்கோவில் | -- | பொது அதிகார அமைப்பு |

## ஆணை

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் 24.01.2020 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவில், தனது 20.12.2019 தேதியிட்ட காவல்துறை உதவி கண்காணிப்பாளர் தக்கலை அவர்களிடம் கொடுத்த புகார் குறித்தும், தனது வீட்டிலுள்ள C.C.T.V. கேமராவில் பதிவான காட்சிகள் குறித்தும் 12 இனங்களில் தகவல்கள் கோரியுள்ளார். அதன்பின்னர், பிரிவு 19(1)-ன்கீழ் 11.03.2020-ல் முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். அதன்பின்னர் மனுதாரர், பிரிவு 19(3)-ன்கீழ் 23.04.2020-ல் தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு இரண்டாம் மேல் முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார்.

2. மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது இவ்வாணையத்தால், 13.10.2020 அன்று பிறப்பிக்கப்பட்ட ஆணையில், மனுதாரர் கோரும் தகவல்களை முழுமையாக வழங்குவதற்கு கடைசி வாய்ப்பு வழங்கும் வண்ணம் 22.10.2020-க்குள் வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டிருந்தது. மனுதாரருக்கு எவ்வித தகவல்களும் வழங்கப்படவில்லை என்றாலோ, முழுமையற்ற தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ அல்லது தவறான, குறைபாடான தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ, மனுதாரர் 02.11.2020-க்குள் ஆணையத்திற்கு கடிதம் மூலம் தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

3. மேலே குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆணையின்பால் மனுதாரரின் கவனம் ஈர்க்கப்படுகிறது. அந்த ஆணையில் மேற்கூறப்பட்ட வழக்கில் பொதுத் தகவல் அலுவலர் தகவல்களை வழங்க பணிக்கப்பட்டிருந்தார். அத்தகவல்களை ந.க.எண்.181/கூகாக/தஅஉச/2020, நாள் 21.10.2020 என்ற கடிதத்தின் வாயிலாக வழங்கியதாக பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்துள்ளார். (இணைப்பு). அதன்பின்னர், பல நாட்களாகியும் வரப்பெற்ற தகவல்கள் சம்மந்தமாக மனுதாரரிடமிருந்து எந்தவொரு ஆட்சேபணையும் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் 13.11.2020 வரை பெறப்படாத காரணத்தால், மனுதாரரின் வழக்கு முற்றாக்கி ஆணையிடப்படுகிறது.

ஒம்/- (ரா. ராஜகோபால்)
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA-3414/A/2020</u>**

<u>பெறுநர்</u>

<u>பொது அதிகார அமைப்பு</u>

பொதுத் தகவல் அலுவலர் /
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
தலைமையிடம்,
கன்னியாகுமரி மாவட்டம்,
(இ) நாகர்கோவில்.

<u>மனுதாரர்</u>

திரு வே.ஜான்றோஸ்,
த/பெ.வேதமணி,
சாமிவிளை,
மேக்காமண்டபம் அஞ்சல்-629 166,
கன்னியாகுமரி மாவட்டம்.

PR/PS 20.11.2020

0 5 NOV 2020
039860

காவல் துறை

அனுப்புநர்

T. ஈஸ்வரன்,
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
தலைமையிடம்/பொது தகவல் அலுவலர்,
கன்னியாகுமரி மாவட்டம்,
(இருப்பு) நாகர்கோவில்.

பெறுநர்

மாண்புமிகு தமிழ்நாடு மாநில தகவல் ஆணையர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
எண்.2, தியாகராய சாலை,
(ஆலையம்மன் கோவில் அருகில்),
தேனாம்பேட்டை, சென்னை.

ந.க.எண். 181/கூகாக/தஅஉச/20, நாள்: 21 10.2020.

அய்யா,

பொருள்: காவல் - கன்னியாகுமரி மாவட்டம் - தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 – கன்னியாகுமரி மாவட்டம், மேக்காமண்டபம் அஞ்சல், சாமிவிளையை சேர்ந்த திரு. வி.ஜாண்ரோஸ் என்பவரது 2வது மேல் முறையீடு – அறிக்கை சமர்பித்தல் - தொடர்பாக.

பார்வை: மாண்புமிகு தமிழ்நாடு தகவல் ஆணைய வழக்கு எண். SA – 003414/A/2020, நாள் 13.10.2020.
2. திரு. வி.ஜாண்ரோஸ், த/பெ. வேதமணி, சாமிவிளை, மேக்காமண்டபம் அஞ்சல் என்பவரது பிரிவு 6(1)ன் கீழான மனு நாள் 24.01.2020.
3. தக்கலை காவல் நிலைய ஆய்வாளரின் அறிக்கை, நாள் 28.02.2020.
4. இவ்வலுவலக கடித குறிப்பு இதே எண், நாள் 04.03.2019.
5. திரு. வி.ஜாண்ரோஸ், த/பெ. வேதமணி, என்பவரது முதல் மேல்முறையீடு, நாள் 11.03.2020.
6. முதல் மேல்முறையீட்டு அதிகாரியான காவல் கண்காணிப்பாளரின் மேல்வரைவு ந.க.எண். ஜி1/12090/2020, நாள் 20.05.2020.

****

பார்வை ஒன்றில் கண்ட மாண்புமிகு தமிழ்நாடு தகவல் ஆணையத்தால் வழங்கப்பட்ட உத்தரவிற்கிணங்க திரு. வி.ஜாண்ரோஸ் என்பவரது தகவல் அறியும் உரிமை சட்டம் 2005ன் கீழான 2-வது மேல்முறையீட்டிற்கான விளக்கம் மாண்புமிகு தமிழக ஆணையம் முன்பாக பின்வருமாறு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

2. திரு. வி.ஜாண்ரோஸ். கடந்த 24.01.2020 தேதியிட்டு இவ்வலுவலகத்தில் அனுப்பப்பட்ட தகவல் அறியும் உரிமை சட்டம் 2005ன் கீழான மனுவில் 20.12.2019ம் தேதி அவரது வீட்டில் நடைபெற்ற சம்பவம் தொடர்பாக அனுப்பப்பட்ட புகார் மனுக்களின் நகல்களையும், அவரது வீட்டில் பொருத்தப்பட்ட CCTV-யில் பதிவான காட்சிகளின் நகல்களையும், இணையதளத்தில் பதிவு செய்த மனுவின் ரசீதின் நகலினையும் இணைத்து அப்புகார் மனுக்கள் தொடர்பாக 12 இனங்களில் தகவல்கள் கோரியிருந்தார் (நகல் இணைக்கப்பட்டுள்ளது).

3. மனுதாரரால் கோரப்பட்ட தகவல்களில் இனங்கள் 2 முதல் 9 வரை கோரப்பட்ட தகவல்கள் இந்திய தண்டனை சட்டம் குறித்த பொதுவான தகவல்களை கோரியிருந்ததால் அதை சட்ட புத்தகத்தை படித்து தெரிந்து கொள்ளுமாறும், இனம் 1-ல் கோரப்பட்ட தகவலுக்கு அவரது புகார் மனுவினை பதிவு செய்யப்பட்ட பதிவேட்டில் உள்ள பதிவின் நகலினையும், இனம் 10-ல் கோரப்பட்ட

தகவல் மனு விசாரணை மேற்கொள்ளாத நிலையில் உள்ளதால் விசாரணை முடிவுற்ற பின்னரே விசாரணை குறித்த விபரம் தெரியவரும் எனவும், இனம் 11-ல் 19.12.19 முதல் 21.12.2019 ஆகிய தேதிகளில் அவசர போலீஸ் 100-க்கு வரும் அழைப்புகள் அனைத்தும் சென்னை மாநில காவல் தலைமை கட்டுப்பாட்டு அறையில் பெறப்பட்டு அங்கிருந்து இம்மாவட்டம் சம்பந்தப்பட்ட அழைப்புகள் காவல் கட்டுப்பாட்டு அறையில் மின்னஞ்சல் மூலமாக கிடைக்கப்பெறுவது வழக்கம். ஆதன்படி 19.12.2019 முதல் 21.12.2019 வரை பல அழைப்புகள் பெறப்பட்டது. அதில் மனுதாரருக்கு தேவைப்படும் அழைப்பின் எண்ணினை பிரிவு 6(1)(b)ன்படி குறித்துரைத்தால் அந்த அழைப்பு குறித்த தகவல் இருக்குமேயானால் அந்த தகவல் வெளிப்படுத்துவதற்குரிய நடவடிக்கை சட்ட நடைமுறைகளின்படி மேற்கொள்ளப்படும் எனவும் இனம் 12-ல் கோரப்பட்ட தகவலுக்கு நிராகரிக்கப்பட்ட அழைப்புகள் குறித்த தகவல்கள் இல்லை எனவும் சரியான தகவல்கள் சட்ட நடைமுறைகளின்படி மனுதாரருக்கு சார்பு செய்யப்பட்டது (நகல் இணைக்கப்பட்டுள்ளது).

4. தகவலை பெற்றுக் கொண்ட மனுதாரர் பிரிவு 19(1)ன் கீழான தனது மேல்முறையீட்டில் இனங்கள் 2 முதல் 9 வரை கோரப்பட்ட தகவல்களுக்கு சட்ட புத்தகத்தை பார்த்து தெரிந்து கொள்ள வேண்டும் எனக்கூறி அவரை திசைதிருப்பி விட்டதாகவும், இனம் 10-ல் கோரப்பட்ட தகவலுக்கு மனு விசாரணை மேற்கொள்ளவில்லை என மொட்டையாக கூறியதாகவும் குறிப்பிட்டிருந்தார் (நகல் இணைக்கப்பட்டுள்ளது)

5. மேல்முறையீட்டாளரால் கூறப்பட்ட குற்றச்சாட்டிற்கு இனம் 2 முதல் 9 வரை கோரப்பட்ட தகவல்களை சட்ட புத்தகத்தை படித்து தெரிந்து கொள்ளவும் என வழங்கப்பட்ட தகவலினை கூர்நதாய்வு செய்யும்போது சட்ட நடைமுறைகளின்படி தகவல் சார்பு செய்யப்பட்டது எனவும், இனம் 10ல் கோரப்பட்ட தகவலுக்கு தக்கலை காவல் ஆய்வாளரிடமிருந்து அறிக்கை பெற்று அவரது புகார் மனுவின் மீதான விசாரணை அறிக்கையின் நகலினை இலவசமாக மனுதாரருக்கு மாவட்ட காவல் அலுவலக ந.க.எண். ஜி1/12090/2020, நாள் 20.05.2020 உடன் இணைத்து மேல்முறையீட்டாளருக்கு பதிவு தபாலில் சார்பு செய்யப்பட்டது (நகல் இணைக்கப்பட்டுள்ளது). ஆனால் தபால் பட்டுவாடா செய்வதற்காக அஞ்சல் அலுவலக ஊழியர் மேல்முறையீட்டாளரின் முகவரிக்கு சென்றபோது வீடு பூட்ட நிலையில் உள்ளதாகவும் (Door locked) எனவும், முகவரியாளர் ஆஜரில்லை (Addressee absent) எனவும் குறிப்பிட்டு திருப்பப்பட்டது (நகல் இணைக்கப்பட்டுள்ளது).

5. இதனை எதிர்த்து மேலமுறையீட்டாளர் இரண்டாம் மேல்முறையீடு சமர்பித்துள்ளார். திரு.ஜாண்றோஸ் என்பவரால் கோரப்பட்ட இனங்கள் 1 முதல் 12வரை கோரப்பட்ட தகவல்களுக்கு சட்ட நடைமுறைகளின் படி அப்போதைய பொது தகவல் அலுவலராலும், முதல் மேல்முறையீட்டு அதிகாரியான மாவட்ட காவல் கண்காணிப்பாளரால் சட்ட நடைமுறைகளின்படி உரிய தகவல்கள் சார்பு செய்யப்பட்டதோடு மேற்கொண்டு சார்பு செய்ய தகவல்கள் ஏதுமில்லை என்பதாலும் இந்த மேல்முறையீட்டினை முற்றாக்கி ஆணை வழங்க மாண்புமிகு தமிழ்நாடு தகவல் ஆணையம் முன்பாக பணிந்து கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

இணைப்பு: மேற்கூறியவாறு.

[signature] 21/10/20

கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
தலைமையிடம்/பொது தகவல் அலுவலர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

நகல்: திரு. ஜாண்றோஸ், த/பெ. வேதமணி, சாமிவிளை, மேக்காமண்டபம்(அ), கன்னியாகுமரி மாவட்டம் - 629166.